செய்தித் தாளாகப் பதிவு பெற்றது. | வெள்ளிக்கிழமைதோறும் வெளி வருவ

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலன சபை வெளியீடு. | பிரதி விலை: சதம் 15

ஆரம்பம்: விரோதி ளு (1889) ஆவணி மீ 28 உ, அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்- அஉ] யாழ்ப்பாணம்:- சாதாரண ளு கார்த்திகை மீ உகூ உ வெள்ளிக்கிழமை (11-12-1970) [இல-டசு

## திருக்கேதீச்சர புராணவணிந்துரை

(பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்)

கௌரிநாயகி சமேத திருக்கேதீசுவரப் பெருமானின் திருவருளினாலே திருக்கேதீச்சர புராணத்தைப் படிப்பதொரு வாய்ப்புக்காத்திராப்பிரகாரம் எனக்குக் கிடைத்தது. பாடல்களில் ஆங்காங்கே கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகளின் அடிச்சுவடுகளையும், சேக்கிழார் நாயனாரின் அடிச்சுவடுகளையுங் காணுந்தோறுங் களிப்பு மிக்கது. புராண நடை, பொங்கித் ததும்பித் தங்கு தடையற்றதோரருவிபோலொழுகியது. இடையிடையே வருஞ் சிவார்ச்சனைக் கிரமம் நெஞ்சை உருக்கியது. பாலாவி என்கின்ற திவ்ய தீர்த்த மகிமை உற்சவ விசேஷம் திருநந்தவன வருணனை என்றின்னோரன்னவை புராணத்தின் மணியாரங்களாய் மிளிர்ந்தன.

கடவுள் வாழ்த்துக்களும் இலங்கைச் சிறப்பில் வருந்தல விசேடங்களும் ஒருங்கு சேர்ந்து, திருக்கேதீசுவரத் திருவாயிற் கோபுரம்போன்று, புராணத்து நுழை வாய்தலை அழகு செய்கின்றன.

இத்துணைச்சிறப்பு வாய்ந்த இப்புராணத்தை, சிவாகம உணர்ச்சியும், புராணங்களில் அளவிறந்த பயிற்சியும், இலக்கணலக்கிய முதிர்ச்சியும், சைவசித்தாந்த அறிவும், திருமுறைகளிலே மிக்க பயில்வும் ஒருங்கமைந்து, கவிதா சாமார்த்தியமும் படைத்துத் தெய்வபக்தி கனிந்த ஒருவராலேதான் இயற்ற முடியும்.

சிவாகம பானுவாய் அருமந்த சைவநூலுரைகள் பலவற்றை உபகரித்த அச்சுவேலி, சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள் அவர்களின் அருந்தவப் புதல்வராகிய சிவஸ்ரீ. வைத்தீசுவரக் குருக்கள் அவர்களே திருக்கேதீச்சர புராணத்தை இயற்றியவர்கள் என்று அறியும்போது பெரிய ஆச்சரியம் உண்டாகின்றது.

குருக்களவர்கள் தமது அருமைத் தந்தையார் அவர்கள் உபகரிக்கும் நூலுரைகளை உருப்படுத்துவதில் அரும்பெருஞ் சேவைகள் செய்தும், விநாயகராலய பூசைகள், உற்சவங்கள், புராண படனங்கள் நடத்திக் கொண்டும், தமது பேரறிவையும் கவிதா சாமர்த்தியத்தையும் வெளிக்காட்டாது, குடத்துள் விளக்குப்போல அடக்கமாயிருந்திருக்கின்றார்கள்.

நூலாசிரியர் காலத்திலேயே திருக்கேதீச்சர புராணம் அச்சு வாகனம் ஏறியிருக்குமாயின், புராணசிகாமணி சிவஸ்ரீ கு. வைத்தீசுவரக் குருக்கள் அவர்களின் அருமை பெருமைகளை உலகுக்குக் காட்டிக் கைம்மாறு செய்யும் பாக்கியத்தைச் சைவ உலகு பெற்றிருக்கும்.

இப்பொழுது வேலணைத் திருஞானசம்பந்தர் மடாலய பரிபாலன சபை, திருக்கேதீச்சர புராணத்தை வெளியிட்டுத் திருக்கேதீச்சர தலத்தில் அரங்கேற்றஞ் செய்யவும் ஒழுங்கு செய்து, வேலணையில் நாவலர் காலந்தொட்டு நடந்து வந்த பழைமையான சைவப் பெருமையைப் புதுமை செய்துகொண்டது. சித்தாந்த சிரோமணியாய், சைவபரிபாலன சபையின் சமய விஷயக் காரியதரிசியாய், சைவத் துறையைப் பலமுகமாக விளக்கஞ் செய்பவர்களான திரு. மு. மயில்வாகனம் அவர்கள் இப்புராண வெளியீட்டுக்கும் அரங்கேற்றத்துக்கும் மூலபுருஷராயிருந்து வருவது பெரிதும் போற்றற்பாலதாம்.

திருக்கேதீச்சர புராண அரங்கேற்றத்தின் போது, நூலாசிரியரான குருக்கள் அவர்களின் ஆத்மா சாந்தியெய்தி ஆனந்தம் மிக்கு ஆசிவழங்கும்.

கௌரி சமேத திருக்கேதீசுவரப் பெருமானின் திருவருள் பெருகுவதாக.

## நல்லை. ஞான சம்பந்தராதீனம்

மார்கழி 17-ஆம் நாள் 1.1.71 முதல் 26-ஆம் நாள் 10-1-71 ஞாயிறு வரை நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் மணிவாசகர் விழாவும் திருவெம்பாவை உற்சவமும் வழமைபோலச் சிறப்பாக நிகழ ஒழுங்குகள் செய்யப்பெற்றுள்ளன, தினமும் அதிகாலையும் மாலையும் மணிவாசகப் பெருமான் ஆதீனத்திலிருந்து எழுந்தருளி நல்லைச்சிவன்கோவில் வருவர், இரவு 7-00 மணி முதல் 8-30 மணிவரை ஆதீனத்தில் "வாதவூர் வள்ளல்" என்னும் பொருளில் ஸ்ரீலஸ்ரீ தம்பிரான் சுவாமிகளால் இன்னிசைச் சொற்பொழிவு நிகழ்த்தப்பெறும், ந, வி.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

பேழை வார்சடைப் பெருந்திரு
மகடனைப் பொருந்த வைத்
தொருபாகம்
மாழை யங்கையற் கண்ணிபா
லருளிய
பொருளினர் குடிவாழ்க்கை
வாழையம்பொழின் மந்திகள்
களிப்புற மருவிய
மாதோட்டக்
கேழல் வெண்மருப் பணிந்த
நீண்மார்பர்கே தீச்சரம்
பிரியாரே.

திருச்சிற்றம்பலம்
—திருஞானசம்பந்தசுவாமிகள்

## கந்தபுராணபடனம்

சைவபரிபாலசபை ஆதரவில் சபை நாவலர் மண்டபத்தில் நடைபெறுகின்ற கந்தபுராண படனத் தொடரில் 8-12-70 செவ்வாய்க்கிழமையன்று மகேந்திர காண்டம் ஆரம்பமாகி நடைபெறுகின்றது

## திருக்கேதீச்சரப் புராண அரங்கேற்றம்

திருவருளை முன்னிட்டு அச்சுவேலி சிவாகமஞானபாநு சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக்குருக்கள் அவர்கள் திருக்குமாரன் சிவஸ்ரீ கு. வைத்தீசுவரக் குருக்கள் நமது ஈழ நாட்டிலுள்ள தேவாரம் பாடப் பெற்ற தலங்களுளொன்றகிய திருக் கேதீச்சரமென்னும் தலத்தைப் பற்றி திருக்கேதீச்சர புராணமென்னும் ஒரு தல புராணத்தைச் செய்துள்ளார். அதனைச் சைவவுலகம் பெற்றுப் படித்துக் கௌரியம்பாள் சமேத கேதீச்சர நாதனுடைய அருளைப் பெற்று உய்யும் பொருட்டு வேலணைத் திருஞான சம்பந்தர் மடாலய பரிபாலன சபையார் அச்சிடுவித்துள்ளனர். ஷை நூலினது அரங்கேற்றம் (இன்று) 26-ந் திகதி (11.12.70) வெள்ளிக் கிழமை திருக் கேதீச்சரத்தில் நடைபெற இருக்கிறது. பகல் 11.30 மணியளவில் விசேஷ அபிஷேகாராதனைகள் நிகழ்ந்தபின்பு நூல் அரங்கேற்றத்தை சைவப்புலவர்மணி திரு. த. குமாரசாமிப் பிள்ளை அவர்களும் கல்வயல் சங்கீதபூஷணம் திரு.சி விநாசித்தம்பி அவர்களும் பிறரும் நடத்தி வைப்பார்கள்.

## நூல் வெளியீடு

"முருகன் வரலாறு" என்னும் அழகிய சிறு கைநூலை திருக்கார்த்திகை தீப விழாவை முன்னிட்டு (வெளியீடு எண்: 26) மில்க்வைற் ஸ்தாபனத்தார் வெளியிட்டுள்ளார்கள்.

கொழும்பு, விவேகானந்த சபை

## ஓதுவார் பயிற்சிக்கு விண்ணப்பங்கள்

கொழும்பு விவேகானந்த சபை திறமையுள்ள இருவரைத் தமிழ்நாட்டுக்கு அனுப்பி, தருமபுர ஆதீனத்தில் ஓதுவாராகப் பயிற்றுவித்தற்கு ஒழுங்குகள் மேற்கொண்டுள்ளது. பயிற்சி சுமார் நான்கு வருடங்கள் வரை நீடிக்கும். பயிற்சிக்குப் போய் வருவதற்கும், பயிற்சிக் காலத்தில் உணவு, உறையுள் வசதிகளுக்கும் விவேகானந்த சபை பொறுப்பாயிருக்கும். பயிற்சி முடிந்து இலங்கை திரும்பியதும் ஐந்து வருடத்திற்கு விவேகானந்த சபையில் கட்டாய சேவை புரிதல் வேண்டும், அக்காலத்தில் உரிய சம்பளம் வழங்கப்படும்.

விண்ணப்பிப்போர் ஆண்களாய், க. பொ. த. ப. பரீட்சையில் தமிழ், இந்து சமயம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்தவராய், சைவாசாரம் உடையவராய், ஓரளவு சங்கீதம் தெரிந்தவராய் இருத்தல் வேண்டும். இருபது வயதுக்குட்பட்டவரே விரும்பப்படுவர். ஏனைய தகுதிகள் எல்லாமுடையவராயின் வயதுக் கட்டுப்பாடு தளர்த்தப்படும்.

இதற்கான விண்ணப்பங்கள் 15 1—1971க்கு முன் கிடைக்கத்தக்கதாக சபைக் காரியதரிசிக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

34, விவேகானந்த மேடு, கொழும்பு. 1-12-70

மு. சிவராசா
கௌரவ பொதுச்செயலாளர்

## மக்கட்பிறப்பின் மாண்பு

( திரு. செ. வைத்தியலிங்கம், எம். ஏ., எம். லிட், )

முன் வளர்ச்சி —3

மக்கட் பிறவியிலே நிலைபேறு கொள்ளுதல்.

வையகத்திலே வாழ்வாங்கு வாழ்வு மேற்கொண்டவர்கள் உலகினர் கண்ணுக்கு, இறந்தவர்களாக—மறைந்தவர்களாகத் தோன்றலாம். உண்மையில் அவர்கள் அழியாதவர்கள். அவர்கள் உலகியல் தொடர்போடும் வாழ்ந்திருக்கலாம்; ஆன்மீக நெறியிலும் வாழ்ந் திருக்கலாம். வாழ்க்கைக்கு அப்பாலும் அவர்கள் பெயர்கள் வரலாற்றுப் பொன்னேடுகளில் பொறிக்கப் பட்டு நிலைகொள்ளுகின்றன. எனவே, வாழ்வின் நிறை பயனைக் குறைவின்றிப் பெற்ற உண்மை மக்கள் அவர்களே; நிலைபேறும் அவர்களுக்குத் தான் பொலிவுறுகின்றது.

பேரிலக்கியம் படைத்து மக்களுக்கு வழங்கிய கம்பர், சேக்கிழார், காளிதாசர், சேக்ஸ்பியர், மில்டன், கதே போன்ற இலக்கிய மேதைகள் தம் அரும்பெறற் படைப்பால் இன்றும் வாழ்கின்றார்கள். இசை வாணர்களா

வளர்ச்சி 3-ஆம் பக்கம்

## திருக்கார்த்திகை

ஆனைக்கோட்டை, மூத்தவிநாயகர் ஆலய திருக்கார்த்திகை உற்சவம் இன்று (11-12-70 வெள்ளிக்கிழமை) சிறப்பாக நடைபெறும். திருமுறைப்பாராயணமும் இடம்பெறும்.

மாகோ
## சைவ அபிவிருத்திச் சபை

மாகோ. சைவ அபிவிருத்திச் சங்கத்தினர் இம் மாதம் 11 ஆம் திகதி மாலை 5-30 மணிக்கு திருக்கார்த்திகைத் தீப விழாவைக் கொண்டாடுவர். இவ் விழா மாகோ மகாவித்தியாலயத்தில் நடைபெறும். மேற்படி விழாவில் திரு எம், ஜெகநாதன் டி, எம் ஓ அவர்களுக்கு பொன்னாடை போர்த்துதலும் "சைவ நெறி" என்னும் மலரின் வெளியீடும் இடம்பெறும். இறுதியில் அருணகுழுவின் மெல்லிசை விருந்தும் இடம் பெறும்,

## சிவனடியார் திருக்கூட்டம்

சென்னைச் சிவனடியார் திருக்கூட்ட மாதாந்திர வழிபாடு பூசலார் நாயனார் திருவவதாரத் தலமாகிய திருநின்றவூர் இருதயாலீச்சுரர் திருக்கோயிலில் 7. 11. 70 சனிக்கிழமை மாலை நிகழ்ந்தது. 8. 11. 70 காலையும் உழவாரத் தொண்டும் வழிபாடும் நிகழ்ந்தன. திரு. P. சுவாமி நாதன் முதலிய அன்பர்கள் பங்குகொண்டனர்.

## திவ்வியஜீவனசங்க

யாழ்ப்பாணம் திவ்விய ஜீவன சங்கத்தின் கட்டிடத் திறப்பு விழாவும்முதலாவது ஆண்டுவிழ வும் நாளை முதல் 14 ஆம் திக வரை நல்லூரில் நடைபெறு இவ்வைபவத்துக்கு உலக திவ்வி ஜீவனசங்கத் தலைவரான சுவா சித்தானந்த மகாராஜ் அவர் வருகை தருகின்றார்கள்.

14-12-70 திங்கள்
திருக்கேதீச்சரம், கீரிம
சிவன்கோவில், நல்
சிவன்கோவில் சங்கா
கம், தண்டிகையுற்சவ

# சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

THE SAIVAPRAKSA PRESS.

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவ ரானினம் வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

# இந்து சாதனம்

சாதாரண ஞு கார்த்திகை மீ உகூ-உ வெள்ளிக்கிழமை [1970]

## கற்றபடி ஒழுகுதல்

"கற்க கசடறக் கற்பவை கற்றபி
னிற்க வதற்குத் தக"

ஒருவன் கற்கவேண்டிய நூல்களைக் குற்றமறக் கற்றல வேண்டும். அங்ஙனங் கற்றபின்பு கற்ற தன்படி ஒழுகுதல் வேண்டும். கற்றவர்கள் கற்றபடி ஒழுகாவிட்டால் அவர்கள் கற்ற கல்வியினுலொருபயனு மில்லை அறம், பொருள், இன்பம் வீடாகிய நான்கு உறுதிப் பொருட்களையே ஒருவன் விரும்பிக் கற்றல் வேணடும். கற்றறிந்தோரை யடைந்து விபரீதங்களை நீக்கிக் கற்றலே கசடறக் கற்றலாகும. கற்றவர்கள் தங்களால் வணங்கத் தக்கவர்களை வணங்குதல் வேண்டும். அந்தணர், சான்றோர், அருந்தவத்தோர், தாய் தந்தை முதலியவர்களை கற்றறிந்தவர்கள் வணங்குதல் வேண்டும. அங்ஙனம் வணங்குகின்றவர்களிடத்தில் செல்வம் நிலைத்திருக்கும். அல்லாதாரிடத்தில் வறுமை குடி கொண்டிருக்கும்.

பணியப் படுவார் புறங்கடைய ராகத்
தணிவில் களிப்பினுற் ருழ்வார்க் — கணிய
திளையாண் முயக்கெனினுஞ் சேய்த்தன்றே மூத்தாள்
புணர்மூலைப் பாகங் கோளல்.

— குமரகுருபரசுவாமிகள்.

இளையாள் முயக்கென்றது - செல்வத்தோடு கூடியிருத்தல்.
மூத்தாள் சேய்த்தன்று — மூதேவி மிக அண்மைககாலத்துள்ள தென்றபடி

இங்குக் கூறிய வகையில் கற்றறிந் தொழுகிய ஒரு பெரியாரைப்பற்றி இப் பிரசுரத்தில் வெளிவருகின்ற திருக்கேதீச்சரப் புராண வணிந்துரையில் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள். அவர்தான் சிவாகமஞானபானுவாய் விளங்குகின்ற அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள் திருக்குமாரன் காலஞ்சென்ற சிவஸ்ரீ கு. வைத்தீசுவரக் குருக்கள். அவர் தந்தையாரிடத்திலும், பிறரிடத்திலும் தமிழையும் வடமொழியையும் நன்கு கற்றவர். தமிழிலும் வடமொழியிலும உள்ள இலககண இலக்கிய புராணேதிகாசங்களைச் சிறப்பாகக் கற்றவர்.

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் கல்விபயின்று மற்றிக்குலேஷன் (Matriculation) பரீட்சையில் சித்தியடைந்தவர். அவருடைய குலத்தைச் சேர்ந்த பல இளைஞர்களைப் போல அரசாங்க உத்தியோகத்தை அவர் நாடவில்லை. பணிவுடனும் அடக்கத்துடனும வாழ்ந்து சைவத் தொண்டாற்றியவர் அவரே இன்று திருக்கேதீச்சரத்தில அரங்கேற்றப் பெறும திருக்கேதீச்சர புராணவாசிரியர். 'கற்றபடி ஒழுகி' வாழ்ந்த அவரைப்போன்றாரது வாழ்க்கையை நாங்கள் பின்பற்றுவோமாக.

## நல்லூர் சிவன்கோவில் கடைசி சோமவார சஹஸ்ர சங்காபிஷேகம்

எதிர்வரும் கார்த்திகை மீ 29-ம் திகதி (14-12-70) திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு சிவ பெருமானுக்கு சகஸ்ர சங்காபிஷேகமும. ஸ்ரீ கமலாம்பிகா தேவிக்கு அஷ்டோத்திர சத சங்காபிஷேகமும், பஞ்சமுகார்ச்சனையும் மாலை 6-30மணிக்கு சுவாமி அம்பாள் உற்சவ காட்சியும் நடைபெறவிருக்கிறது. (ந. வி.)

கொழும்பு விவேகானந்த சபை

## அ. இ. சைவ சமய பாடப் பரீட்சைப் பெறுபேறு

கொழும்பு விவேகானந்த சபையால் 22-10-70 இல் நடாத்தப்பெற்ற பரீட்சையில் 546 பாடசாலைகளிலிருந்து 51,000 மாணவர்கள் விண்ணப்பித்து 46,076 பரீட்சார்த்திகள் பங்கு பற்றினர் 2 ம் வகுப்பு தொடக்கம் 10 ம் வகுப்பு மாணவர்கள் வரை பங்கு பற்றிய இப் பரீட்சையில் 21,860 பரீட்சார்த்திகள் சித்தியடைந்துள்ளனர். இவர்களின் பெறுபேறுகள் 5. 12. 70 இல், பங்குபற்றிய சகல பாடசாலைகளுக்கும், சங்கங்களுக்கும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. பெறுபேறுகள் கிடைககப் பெறாதவர்கள் சபைப் பரீட்சைச் செயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்,

## மனம் பண்படைய மார்க்கம் என்ன?

### என்று நாம் நாவலர் காட்டிய வழியில் செல்கின்றேமோ — அன்றுதான் நாம் நாவலருக்கு நன்றிக் கடனாற்றியவராவோம்

[நாவலர்பெருமான் குருபூசையிலன்று யாழ். நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரியம்பாள் ஆலயத்தில் யாழ். இந்துக் கல்லூரி மாணவன்: செல்வன். போ. இரகுபதி பேசிய பேச்சின் சாரம் வருமாறு:— ]

"அந்நியராட்சியில் கூம்பிக் கிடந்த சைவம் என்ற தாமரை மலரை மலர்வித்தது எம் ஐந்தாம் குரவராகிய ஞானபானு நாவலர் பெருமானது பணியே பிற மதங்களின் தாக்குதல்களினின்றும் சைவ சமயத்தைக் காத்து எழுச்சி பெறச் செய்யத தோன்றினர் நாவலர் நாவலருககு முன்னுமொரு நாவலரில்லை; பின்னுமொரு நாவலரில்லை. முன்னிருந்த எம் சமயாசாரியர்கள் தாம் சென்ற இடமெல்லாம் திருமுறைகளை அருளிச் செய்தார்கள். இவரோ தாம் சென்ற யிடமெல்லாம் உலோகோபகாரமாகிய சமயப் பிரசங்கங்கள் செய்துவந்தார். பௌத்தரோடும், சமணரோடும் வாதிடுவது சமயாசாரியார்கட்கு ஒரு நாள் இருநாள் வேலை, இவருககோ புறச்சமய கண்டனம் சிவபரியந்த முளளவேலை.

நாவலர் பெருமான் சைவத்தைக் காப்பதற்கு எவ்வளவு சிரமப்பட்டிருப்பார். "கன்னியை நாயகனிடத்து ஒரு துட்டாயினும் வாங்காது வீடு. விளைவிலம். தோட்டம், ஆபரணம், என்பவற்றோடு விவாகஞ்செய்து கொடுககும் வழககமே யுடையது என் ஜென்மதேசமாயினும், நான் அவ் வில்வாழ்க்கையில் புகவில்லை. இவையெல்லாவற்றிற்கும் காரணம் சைவத்தையும் அதன் வளர்ச்சிககு கருவியாகிய தமிழையும் வளர்க்க வேண்டுமென்ற பேராசையே யாம். ... ... ... நிலையில்லாத என் சரீரம் உள்ள பொழுதே என் கருத்து நிறைவேறுமா நிறைவேருதோ என்ற கவலை என்னை இரவும் பகலும் வருத்துகின்றது" இவ் வாககியங்களைப் பார்க்கும்போது நாவலரவர்கள் சமயத்தைக் காக்க எவ்வளவு சிரமப்பட்டிருககின்ருர் என்பது புலனுகின்றது

ஆனல், இன்று நாவலர்காட்டிய வழியில் நாம் செல்லுகின்ருேமா என்ருல் இல்லை என்ற பதிலையே ஏக்கத்துடன் பெற வேண்டியிருககின்றது. நாவலரவர்கள் பூதவுடலை நீத்து தொண்ணூறு ஆண்டுகளுககு மேலாகின்றது. இவ்வளவு காலத்தில் தான் எவ்வளவு மாற்றங்கள்! அன்று கால் கோடியாய் இருந்த சனத்தொகை இன்று ஒன்றே கால் கோடியாய்விட்டது விஞ்ஞானமோ சந்திரனில் இறங்கும் அளவுக்கு வந்துவிட்டது. பாடசாலைகள் பெருகிவிட்டன. படிப்போர் தொகையும் பெருகிவிட்டது. ஆனல் மனிதனுடைய மனம்மட்டும பண்படையவில்லை. அகவொழுக்கம் குன்றிக்கொண்டே போகின்றது. மனித சமுதாயத்தின் காவற்றெய்வங்களாகிய சமயாசாரியர்கள் நகைக்கப்படுகின்ருர்கள். சடப்பொருட்களோடு போராடுகின்ற விஞ்ஞானிகளும், வெறும் உயிரற்ற உணர்ச்சியற்ற யந்திரங்களும் முதலிடம் பெறுகின்றன. இவ் விஞ்ஞானிகள் தானு நம்மை வழிநடத்திச் செல்லப்போகின்ருர்கள்? இவர்களா நம் வழிகாட்டிகள்? வெட்கம்! வெட்கம்! விஞ்ஞானம் வேண்டாமென்று நான் கூறவில்லை எந்த அளவிற்கு விஞ்ஞானம் வளர்கின்றதோ அதே அளவிற்கு சமயமும வளர வேண்டும்.

நாவலர் பெருமானுக்குச் சிலை திறுவினல் மட்டும் போதாது— விழா வெடுத்தால் மட்டும் போதாது மேடையேறிப் பிரசங்கம் செய்தால் மட்டும் போதாது — என்று நாம் நாவலர் காட்டிய வழியில்செல்கின்ருேமோ அன்று தான் நாம் நாவலருககு நன்றிக் கடன் ஆற்றியவர்களாகின்ருேம்',

இவ்விழா யாழ். நாயன்மார்கட்டு சைவ சமய அபிவிருத்திச் கழகத்தின் ஆதரவில் டி கழகத்தலைவர் திரு. க சோக்கலிங்கம் B A. அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. நல்லூர் ஆசிரிய கலாசாலை ஆசிரியர் திரு. மு. கதிரவேலு, நாவலர் சைவப்பிரகாசவித்தியாசாலை ஆசிரியர் திரு. சி. கார்த்திகேசு ["சேந்தன்"] ஆகியோர் நாவலர் வழியும் நமதுநிலையும்பற்றி உரை நிகழ்த்தினர்கள். கழகச் செயலர் நாவலர்பெருமானது நீதி வாக்கியங்களை வானெலியில் தினமும் ஒலி பரப்ப நடவடிக்கை எடுக்கும் வண்ணம் அதிகாரிகளிடம் விண்ணப்பிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். திருமதி. S. இரத்தினசபாபதி அவர்கள் சற்குருமணிமாலை ஓதினர்கள். விழாவுக்கு ஏராளம்பேர் சமுகம் கொடுத்திருந்தனர், ந, -வி.

## 'செயற்கரிய செயல்'



பக்தர்:- "கொழும்பு விவேகானந்தசபையார் சிறந்த ஒரு தெய்வப் பணியைத் தொடங்கியிருக்கிறர்களம்மான்! திறமையுள்ள இருமாணவர்களைத் தமிழ்நாட்டுக்கு அனுப்பி தருமபுர ஆதீனத்தில் ஓதுவாராகப் பயிற்றுவித்து அவரை இங்கு பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளார்கள்! நான்கு ஆண்டுகள்வரை நிகழும் இப் பயிற்சிக்குரிய செலவு, உணவு, உடை போக்குவரத்து சகலதுக்கும் அந்தச் சபையினர் பொறுப்பாயிருப்பாங்களாம்! இந்த அரிய வாய்ப்பைப் பெற எந்தெந்த மாணவர்கள் தவஞ் செய்திருக்கிறர்களோ இருந்து பார்ப்பம்?"

சித்தர்: "சிறப்பாகச் சொன்னுயப்பனே! முற்றவமுள்ளவர்களுக்கே இது கிடைக்கும்! 'செயற்கரிய பணி செய்ய முன்வந்த இந்தச் சபையை சைவ உலகம் என்றுமே பாராட்டும்!' அந்த வீரர் பெயரைத் தாங்கிய சபை இப்படியான சீரிய பணியைச் செய்யத் துணிந்ததில் என்ன வியப்புப் பாருங்க? வீரர்களின் முயற்சிகள் வெற்றியாய் முடிய திருவருளை வாழ்த்துவம்! வாழ்க!

"நாயன்மார் - நாதன்"

## மகா கும்பாபிடேகம்

ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் முருகப் பெருமானின் அருள் பெற்ற பிரப்பலன் வசையில் ஸ்ரீ மாயூரப் பெருமான் திருக்கோவில் கட்டப்பெற்று 31. 1. 71 காலை 8. 30 மணிக்குக் குடமுழக்கு விழா நிகழ இருக்கிறது. சுவாமிகள் தவம் செய்த இடத்தில் அக் கோவில் கட்டப்பெற்றுள்ளது.

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

திரு. ம. சி. சிதம்பரப்பிள்ளை அவர்கள் கொழும்பு

(முன் வளர்ச்சி — 4)

நாவலர் பெருமான் தமது உடல், பொருள், ஆவி, அத்தனையையும் சமய விருத்தியின் பொருட்டுத் தியாகம செய்தார். பாதிரிமார்களுடைய துர்ப்போதனைகளுக்கெதிராகவும்.மக்களை கூறு போடும் துண்டுப்பிரசுரங்களுக்கு மாருகவும், நாவலர் பெருமான் ஆணித்தரமான வகையில் கண்டனப் பத்திர மெழுதி பாதிரிமார்களுடைய [illegible]யை அடைத்தார். இதன்பல[illegible], சைவசமயம நீங்கப் புறச்[illegible]யம் போந்த பலர் மீண்டும் சைவம புக்கு, நாவலர்பெருமான் திருவடிகளில்வீழ்ந்து நமஸ்கரித்து,வீபூதி பெற்றுய்ந்தார்கள் கைக்கூலிவாங்கி அன்றாட வாழ்க்கைநடத்தும் பாதிரிகளுடைய கையாட்கள் சிலர் நாவலர் பெருமானுக் கெதிராக நையாண்டி புரிந்தனர், பயமென்றதைஅறியாத நாவலர்பெருமான், மிஷனரிமார்கள் அடாத போதனைகளுக்கும் விஷமச் செய்கைகளுக்கும் எதிராகத் தனித்து நின்றுபோராடினுர்

தென் இந்தியாவின் கண் உள்ள சிதம்பரத்திலே நாவலர் பெருமான் ஒரு வித்தியாசாலையும், ஓர் அச்சுக்கூடமும் தாபித்தார். இதேபோன்று யாழ்ப்பாணத்தில, பல இடங்களில் கல்விக்கூடங்கள் அமைத்துச்சகல கலாவல்லியின கடாட்சம் பெருகச் செய்தார்.

கத்தோலிக்க குருமார்கள் தங்கள் கத்தோலிக்கமதத்தைப் போதிப்பதற்கும், பரப்புதற்கும், எவ்வாறு சிறு பிரசுரங்களைப் பதிப்பித்தார்களோ அவ்வாறு நாவலர் பெருமான்,சைவசித்தாந்த சாரமாக விளங்கும் வேதம, ஆகமம், தேவாரம், திருவாசகம் ஆகியவைகளைப் பிழிந்து சைவச் சிறுர்களுக்குச் சிறுநூல் வடிவில அச்சிடுவித்து உபகரித்தார். தென்னாட்டுச் சைவப் பெரியார் ஸ்ரீலஸ்ரீ ஈசான சிவாசாரியார்அவர்கள் நாவலர்பெருமான் எழுதி வெளியிட்ட சைவவினுவிடை முதலாம், இரண்டாம் புத்தகங்களைக் கண்ணே போற்றுவதோடமையாது, நாவலர் பெருமானைத் தமது ஞான குருவாகவும் போற்றி வந்தார்.

தமிழ்வசனநடைக்கு உன்னத நடைஅமைத்து, தரிப்புக்குறியீடுகளைப் புகுத்தித் தமிழ் அன்னைக்குப் புதுஅணி செய்தார். மேடைப் பேச்சு, பிரசங்கம், உபந்நியாசம். என்ன என்பதே தெரியாத அக் காலத்தில் மக்களிடையே இவைகளுக்கு,தனிமதிப்புக்கொடுத்துச் சமயசசொன்மழைபொழிந்தார் தமது அத்தியந்த மாணவர்களை மக்களிடைசென்று, நற்பழககம், ஆலயவழிபாடு. புலாலுண்ணுமை சேவைபுரிதல் முதலாம் நற்பண்புகளைப் பற்றிப் பிரசங்கிக்குமாறு ஒழுங்கு செய்தார்.

நாவலர் பெருமான் ஓர் உண்மையான, கட்டுப்பாடான பிரமசாரிய வாழ்க்கையைக் கைப்பிடித்து ஒழுகினவர். சிவபூசை செய்யாது அவர் உணவு கொண்டது கிடையாது

கையில் ஒரு செப்புச் சல்லியுமில்லாத வேளையிற்றன்,ஏதாவது ஒரு முக்கிய காரியம் செய்ய ஏற்பாடு செய்திருப்பார். இந்த விதமான சந்தர்ப்பங்களில், இறைவனுடைய திருவடிகளைத் தியானித்தவண்ணம், மல மணித்தியாலம் ஊண், உறக்கமின்றித் தவமிருப்பார். அப்போது ஆண்டவனே [illegible] ஏதாவதொரு திசையிலிருந்து எவராவது ஓர் [illegible] நாவலர் பெருமானுக்கு வேண்டிய

(வளர்ச்சி 3-ஆம் பக்கம்)

## உருவப் படத் திரை நீக்க விழா

—:—

12. 12. 70 சனிக்கிழமை மாலை 5 30 மணிக்கு கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் முதவைத் தலைவர் கௌரவ ஏ, ரத்தினயக்கா அவர்கள் சேர் அருணசலம் மகாதேவா அவர்களின் உருவப் படத்தைத் திரை நீக்கம் செய்து வைப்பார்கள்.

திரு. கோ. ஆழ்வாப் பிள்ளை அவர்கள் தலைமை வகிப்பார்கள். கௌரவ பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டார நாயக்கா, டாக்டர் எம். சி. எம். கலீல், திரு. டட்லி சேனநாயக்கா, திரு ச. சோமசுந்தரம் O B. E. ஆகியோர் உரை நிகழ்த்துவார்கள். ——

## பெரியபுராண விரிவுரைகள்

———

திருமழபாடி அப்பர் அருணெறி மன்றத்தின் சார்பில் குடந்தை பண்ணாராய்ச்சி வித்தகர் திரு ப. சுந்தரேசனர் வெள்ளிக் கிழமை தோறும் திருத்தொண்டர் புராணத்தை ஓதி வருகின்றர். 30. 10. 70 அன்று வம்பறவரிவண்டு சுருக்கம் தொடங்கப் பெற்றதோடு திருக் கோயிலில் அடியார்கள் பலரும் உழவாரப் பணியும் மேற்கொண்டொழுகினர். ——

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக......

2-ஆம் பக்கத்து வளர்ச்சி

பொருளைத் தந்து நிற்பார்கள்.

நாவலர்பெருமான் மக்களின் நலன் பொருட்டு, அவர்கள் இன்னல்களைத் துடைக்கத் தன்னலான கடமைகளைத் திறம்படப் புரிந்தார். கோவில்களின் நிர்வாகத்தில் மிகவும் கண்காணிப்பாளராக இருந்தார். மகாத்மா காந்தியைப் போன்று சாதாரண மக்களுடனும் எளிமையுடன் பழகினர். பஞ்சம், பிணிதோன்றியககால் அரசாங்கத்துடன் வாதாடி நோயினல் அவதியுற்றவர்களுக்குப் பல வித உதவிகளைப் பெற்றுத் தந்தார். ஒருமுறை அரசாங்க அதிபருக்கெதிராக அன்னருடைய அநீதி நிறைந்த நிர்வாகக் கொடுமைகளைப் பற்றி மகஜர்மூலம் எடுத்துவிளக்கி, சீமையிலுள்ள குடியேற்ற நாட்டுக் காரியதரிசிக்கு முறையிட்டார். இலங்கை சட்டமன்றத்தில் சேர் பொன்.இராமநாதன் துரை அவர்கள் நாவலர்பெருமானைக்குறித்து "இந்துமக்களின் சீர் திருத்தச்செம்மல" என வீதந்து உரை நிகழ்த்தியுள்ளார்

இவ் ஈழநாட்டிலும், அண்மை நாடுகளிலும பலகோடிமக்கள், நாவலர்பெருமான் தன்னலமில்லாது ஆற்றிய பல்வேறு தொண்டுகளை எண்ணி, எண்ணி நினைவு கூருகின்றார்கள். ——

## யாழ்ப்பாண மத்திய கல்லூரித் தமிழ் மன்றம்

மேற்படி மன்றத்தின் சார்பில் அண்மையில் ஒரு கவியரங்கேற்றம் (மத்திய கல்லூரி மாணவர்களின்) நடைபெற்றது. மன்ற இயக்குநர் திரு. ஷண்முக குமரேசன் தொடக்கவுரை நிகழ்த்தினர். செல்வன் ஆனந்த பிரசாத், செல்வன் குகானந்தன் செல்வன் சிவகுருநாதன், செல்வன் வ. திருச்செல்வம், செல்வன் ச. வாசுதேவன் ஆகியோரின் கவிதைகள் அரங்கேறின.

கவியரங்கேற்றத்துக்குத் தலைமைவகித்த வண்ணை, நாவலர் மகாவித்தியாலய ஆசிரியர் திரு. சி. கார்த்திகேசன் (சேந்தன்) அவர்கள் கவிதையிலே முன்னுரை நிகழ்த்திக் கவிதை இயற்றிய இளைஞர்களைப் பாராட்டினர்; செல்வன் தெய்வேந்திரன் நன்றியுரை கூறினர்.

## கதி அருள்வாய்!

இராகம்: உசேனி :: தாளம்: ரூபகம்

பல்லவி

சபா பதி உமாபதி
தர்ம பசுபதி — தில்லைச் (ச)

அநுபல்லவி

சுபா ஹர பரமேசா
சோமேஸ்வர சுந்தரேசா (ச)

சரணம்

பதாம் புயத்து நினைவூறி
படாத பவக் கரையேறி
சதாநந்தம் பெற அருள்வாய்
சரணலயக் கதி யருள்வாய் (ச)

—அளவையூர். "அருட்கவி" சி. விநாசித்தம்பிப் புலவர்

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வயிரவி செல்லையா சுன்னுகம் —வழக்காளி

வழ: இல. M B 10711 எதிராக

1. சின்னத்தம்பி கணபதிப்பிள்ளையும் மனைவி 2. இராசம்மாவும் அக்கலககலட்டி. சுன்னுகம் —எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்ரிக் கோட்டின் M B 10711-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணிகளை 1971-ஆம் ௵ தைமீ 18-ம் திகதி (18-1-71) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபாய் 6430/- ம் 24-3-69 தொடக்கம் 13 11. 69 வரைக்கும் ரூபா 4000/- க்கு 9 வீத வட்டியும அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 399/05 சதம்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்கு உடுவில் கோவிற்பற்று. சுன்னுகம் இறை, "அக்கலக் கலட்டி" விலப்பரப்பு 5 ம், கிணறும். செய்பயிர் வான்பயிர்களும். இதற்கு எல்லை கிழக்கு-அம்பலவி வைத்திலிங்கத்துக்கும மறுபேருக்குமுரிய ஆதனங்கள். வடக்கு-பெரியதம்பி செல்லரின் ஆதனம். மேற்கு-ஒழுங்கை. தெற்கு-ஐயம்பிள்ளை தம்பிராசாவுக்கும் மனைவி பரிமளத்திற்குமுரிய ஆதனம். இதடங்கலும் இதில் சொல்லப்பட்ட கிணற்றில் மறு ஆதனங்களுக்கு உள்ள பங்கு பிறநீங்கலாகவும்.

கா. தர்மலிங்கம்
கொமிசனரும், விலைமதிப்பாளரும்

உரும்பிராய்
30-11-70

எம். 419 11-12-70

## மக்கட் பிறப்பின் மாண்பு

1ம் பக்கத்து வளர்ச்சி

இய தியாகையர், கோபால கிருஷ்ணபாரதி, புரந்தரதாசர், காலிப் போன்றோர் தம் இசைப் பாடல்களால் இன்றும் இசைபட உள்ளனர்.

புத்தர், இயேசு, நபிகள் நாயகம், மகா வீரர், குருநானக், சங்கரர், மத்துவர், இராமானுஜர், சைவநாயன்மார்கள், வைஷ்ணவ ஆழ்வார்கள், இராம கிருஷ்ண பரமஹம்ஸர், முதலியோர் தாம் கண்டு வெளிப்படுத்திய அருள்நெறித் தொண்டினுல் நித்தியப் பெரு வாழ்வு கொண்டுள்ளனர்.

திருவள்ளுவர். பிளேட்டோ, கன்பூசியஸ், மார்க்கஸ், அருளியஸ் போன்ற அறநெறி வகுத்த நல்லோர்கள் தம் தத்துவத்தால் அழியாப் பெருவாழ்வு வாழ்கின்றனர்.

வள்ளல் பாரி, பச்சையப்ப முதலியார், சீதக்காதி போன்ற நல்லோர்கள் தம் கொடை மாட்சியால் இன்றும் வாழ்கின்றனர்; சேரன் செங்குட்டுவன், அலெக்சான்டர் போன்ற மாவீரர்கள் தம படைமாட்சியால் என்றும் வாழ்வர்; அருந்ததி, கண்ணகி போன்ற நங்கையர் தம் கற்பு மாட்சியால் என்றும் ஒளி விடுவர்,

ஜார்ஜ் ஸ்டீவன்சன், ஜகதீச சந்திர போஸ், மார்க்கோனி, டைட் சகோதரர்கள் கியூரி அம்மையார் போன்ற அறிவியல் வல்லுனர்களை அவர்கள் தம் ஆராய்ச்சக் கண்டு பிடிப்புக்கள் நாளும் வாழ வைக்கின்றன.

ஆபிரகாம்லிங்கன், மகாத்மா காந்தி, ஜான்கென்னடி, நேரு ஆல்பர்ட்சுவைட்சர்போன்ற சமுதாயத் தொண்டர்கள் தாம் புரிந்த தொண்டுநெறியால் அமர வாழ்வு வாழ்கின்றனர்.

ஆக, இவர்களெல்லாம் தம்வாழ்வில் அயரா உழைப் பிணைத் தவ நெறியாகச் சாதித்த சாதனைகளால் தாம் பிறந்த நாடு, இனம், மதம் முதலிய குறுகிய எல்லைகளையெல்லாம் கடந்து, காலத்தையும் வென்று ஒளிர்கின்றார்கள். சமுதாயத்திற்குப் பயன்படும தம்வாழ்வையே கருப்பஞ்சாருகக் கொண்டதால் தம் உடலங்களைச் சக்கைகளாக உதறித் தள்ளிவிட்டனர். அஃதாவது, அவர்கள் ஊனுடம்பினை விண்ணோடும் காற்ருேடும், கனலோடும், நீரோடும், மண்ணோடும், கலக்குமாறு கரைத்துவிட்டனர். என்றாலும் அவர்கள் தம் புகழுடம்பால் மக்களுக்குப் பயன்படும் வகையில் சிறப்பாகப் பொலிவுறுகின்றனர்.

"மன்னுவுலகத்து மன்னுதல
குறித்தோர்
தமபுகழ் நிறீஇத்
தாமாய்ந்தனரே"

என்ற புறநானூற்று வரிகளே இவ்விடதது நினைவிற்கு வருகின்றன. நிறைவாழ்வு வாழ்ந்த அக் கொள்கைச் சான்ருேர்கள் - உள்ளொளியால் உயர்ந்த உத்தமர்கள்—வலவன் ஏவா வானவூர்தி ஏறிச்சென்ற அந் நல்லோர்கள்—உலகத்தை விட்டே முற்றிலும் நீங்கிவிடவில்லை அவர்கள்தம் குறிக்கோள் வாழ்வை—தம்பெறலரும் பேறுகளை—மக்களுக்கு வழி காட்டியாக நிலைபெற அமைத்துள்ளனர். அதனைப் புரியாது ஒருவன் தன்மனம் போன போக்கில் சென்று இழிந்தால் அதற்கு யார் பொறுப்பு? 'தன்னைத் தலையாகச் செய்வானும் தான்' என்பதனிலே நாலடியார் நவிலும் நல்வாக்கு! ஒளிவிளக்காகிய இறைவனருள் விளங்கலாம்; அதனைப் பயன்படுத் துதலைப் பொறுத்துத் தா[...] பலன் அமையும். "தீபவெ[...]ச்சதில் சிலர் சமைக்கின் ற[...] சிலர் பாகவதம் படிக்கி[...]னர்; வேறு சிலர் பெ[...] பத்திரம் ஆயத்தப் ப[...]கின்றனர். இவர்களு[...] நல்ல செயல்களுக்கும்[...]

(வளர்ச்சி 4-ஆம் பக்[...]

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வேலணை மேற்கைச் சேர்ந்தவரும். காலஞ் சென்ற கணபதிப் பிள்ளை பரமசிங்கம் பிள்ளையின் ஆஸ்திக்குத் தத்துவகாரனுகிய வேலணை மேற்கைச் சேர்ந்த நாகநாதர் நாகரத்தினம்.—வழக்காளி.

இல: M B 10360 எதிராக

வேலணை மேற்கைச் சேர்ந்தவர்கள். 1. கந்தையா சிவகடாட்சம் 2. மனைவி திலகவதி. —எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 10360-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1970-ம் ௵ தை மீ 21-ம் திகதி (21-1-71) வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:—முதல் வட்டி ரூபா 1971 சதம் 25 ம் 9-10-68 தொடக்கம் 14-5-69 வரைக்கும் ரூபா 1000/- க்கு 15வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 399 சதம் 95. அதாவது ஏற்பட்ட செலவு ரூபா 289 சதம் 9[?]; வெலியாத்து செலவு ரூபா 50 சதம் 25; இனி மேல் வரும் செலவு ரூபா 59 சதம் 75.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பற்று பகுதி ஊர் காவற்துறை கோவிற்பற்று சரவணை இறை "அழகக் கோன் வயலும் நரஞ்சன் வயல் பிரிவுகள்" நெல் பரப்பு இலாட்சம் 28 ம் குழி 8 ம். எல்லைகள் கிழக்கு-சண்முகநாதன் மனைவி நாகமன் ஆதனம். வடக்கு-தம்பு மகள் சமலாச்சிப்பிள்ளையின் ஆதனம், மேற்கு-வாய்க்கால். தெற்கு-தம்பிஐயா தர்மலிங்கத்தின் ஆதனம். பதிவு இலக்கம்: யாழ்ப்பாணம் C. 345/78.

எ. பி. பி எதிர்மன்னசிங்கம்
வெந்தீஸ் கொமிஷனரும்,
விலைமதிப்பாளரும்.

107. பெரியதெரு.
யாழ்ப்பாணம்.
21-2-70

எம். 415 11-12-70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

முத்துவேற்பிள்ளை நவரெட்னம் இல: 4 அன்ன சத்திரம் ஒழுங்கை வண்ணார்பண்ணை கிழக்கு, யாழ்ப்பாணம். —வழக்காளி

இல: M B 10092 எதிராக

1. செல்லர் ஐயாத்துரையும் மனைவி
2. கனகம்மாவும் இருவரும் கோயில் வீதி, நல்லூர். யாழ்ப்பாணம் — எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 10092ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணியை 1971-ம் ௵ தை மாதம் 9-ம் திகதி [9-1-71] சனிக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபாய் 4510/- ம் 20-6-1968 தொடக்கம் 13-12-1968 வரைக்கும் ரூபா 2700/- க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 288 சதம் 75 ம் அதாவது, ஏற்பட்ட செலவு 179 ரூபா 95 சதம்; இனிமேல் வரும் செலவு 51 ரூ. 10சதம் வெலியாத்து செலவு ரூபா 57 சதம் 70.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் ப[...] நல்லூர் கோயிற்பற்று நல்லூர் இறை "அம்பொடு வெளி" [...] பரப்பு லாச்சம் 2 (இரண்டு). எல்லைகள் கிழக்கும் மேற்கும்- [...]வார் மூத்தவும் மனைவி தெய்வானை அவர்களினுடைய ஆதனம். வடக்கு- ச. சுப்பிரமணியமும் மனைவி நாகம்மா அவர்களினுடைய ஆதனம். தெற்கு-ஒழுங்கையாகப் பாவிக்கும் தண்ணீர் வாய்க்கால். இக்காணியின் வடகாணியில் வடபககமாய் இருக்கும் கிணற்றின் பங்கும் வழிவாய்க்கால் பாவிப்புரிமையும். பதிவு இல: D. 243/192

எ.பி.பி. எதிர்மன்னசிங்கம்
வெந்தீஸ் கொமிஷனரும விலைமதிப்பாளரும்

107, பெரியதெரு,
யாழ்ப்பாணம்,
6—12—70

எம். 414 11-12-70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இல: M. B. 9593

கார்த்திகேசு இளையதம்பி நீர்வேலி தெத்து, நீர்வேலி —வழக்காளி

எதிராக

ஆறுமுகம் வீரசிங்கத்தின் கைம்பெண் வள்ளியம்மை உரும்பராய் தெற்கு, உரும்பராய். —எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 9593-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1971 ம் ௵ தை மீ 6-ம் திகதி (6-1-71) புதன்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

தீர்வைத்தொகை:— முதல்வட்டி ரூபா 3657/- 26-11-67 தொடக்கம் 24-12-69 வரைக்கும் ரூபா 2500/-க்கு 10 வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 878/59 சதம்.

ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக், வலிகாமம் கிழக்குப் பகுதி உரும்பராய் இறை "கேசன்" (Kesan). இதன் விஸ்தீரணம் விலப்பரப்பு மூன்று (3) இதில் பிரிக்கப்படாத விலப்பரப்பு 7/10 பங்கு. எல்லை கிழக்கு-வைத்திலிங்கம் சந்தையாவும் பெண் தங்கம்மாவினதும் ஆதனம் வடக்கு-ஆறுமுகம் வைத்திலிங்கத்தின் ஆதனம். மேற்கு-ஆறுமுகம் வைத்திலிங்கத்தின் பெண் பரமேஸ்வரியின் ஆதனம். தெற்கு-ஆறுமுகம் வைத்திலிங்கத்தின் ஆதனம் வடக்கெல்லை ஆறுமுகத்தின் காணியில் இருக்கும் கிணற்றில் பங்கும் வழி வாய்க்கால் பங்கும். பதிவு இல: K. 175/209

வே. கோபாலபிள்ளை
கொம்மிஷனர் & விலைமதிப்பாள[...]

22. ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். 2-12-70

எம் 413 11—12—70

## மக்கட் பிறப்பின்...

3-ஆம் பக்கத்தின் வளர்ச்சி

செயல்களுக்கும் தீபவெளிச்சம் பயன்பட்டது எனினும் செயல்களின் நலம் கேடுகள் தீப வெளிச்சத்தைச் சாரா'' என்பர் பகவான் ஸ்ரீ ராம கிருஷ்ணர்.

என வே, சான்றோர்கள் கண்டு காட்டிய ஒளி நெறியிலே—உள்ளொளியால் எய்திடும் உலப்பிலா இன்பநெறியிலே-தம்மை ஆட்படுத்திக் கொள்ள வேண்டுவது ஒவ்வொருவரின் உயிர்ப்பண்பாகும். அதுதான் மக்கட் சமுதாயம் வீணே அழியாமல் காக்கும் நன்றிக்கடனுகும்; நல்லுபாயமுமாகும்.

### குறிக்கோள் வாழ்வு

சிறந்த மலைக்கு அருவியால் அழகுண்டாதல் போலவும்; சிறந்த செடி கொடி மரங்களுக்கு அவை தரும் மலர், காய், கனி, வேர், பட்டை, நிழல், காற்று ஆகியவற்றுல் பல்வேறு நிலைகளில் சிறப்புண்டாதல் போலவும்; பசுவிற்கு அதன் பால்படு பொருள்களால் மதிப்புண்டாதல் போலவும்; நல்ல ஊருணிக்கு இனிய நீரால் பெயருண்டாதல் போலவும்; ஞாயிறு திங்கள் விண்மீன் முதலிய வற்றிற்கு ஒளியால் மாட்சியுண்டாதல் போலவும் மக்களுக்கு அவர்கள் தம் குறிக்கோள் வாழ்வால் தான் பொலிவுண்டாதல் வேண்டும்

குறிக்கோள் வாழ்வானது செயலைப் பொறுத்தமையும், பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடைப்பட்ட உணர்வுள்ள காலத்தில் போற்றி ஆற்று[illegible] [illegible]ற பயன் மிகு செயல்க[illegible]தான் குறிக்கோள் விழு[illegible]தாகும்.

"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக் கல்'' என்பது வள்ளுவம்.

எச்செயலைச் செய்திடினும் மனிதன்செயலை உன்னிப்பாக மறைந்து நின்று உற்று நோக்குகின்ற பேராற்றல் ஒன்றுளது; அஃது அளவில் அறிவு டையது. அதனைக் கடவுளென்றே, சத்தியமென்றே, மனச்சான்று என்றோ அழைத்துக் கொள்ளலாம். ஆனல், அதனை ஏமாற்ற மட்டும் முடியாது. ஏமாற்ற முயல்வது தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்ளும் அறிவீனமேயாகும்.

"தன்னெஞ்சறிவது பொய்யற்க
பொய்த்த பின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்''
என்ற வள்ளுவமும்,

"வஞ்சித்தொழுகும் மதியிலி
காள் யாவரையும்
வஞ்சித்தேம் என்று மகிழன்மின்
—வஞ்சித்த
எங்குமுளனெருவன் காணுங்
கோல் என்றஞ்சி
அங்கங் குலைவதறிவு.''

என்ற குமரகுருபரர் காட்டிடும் எச்சரிக்கையையும் ஈண்டு நினைவுகூருதல் நல்லது.

(வளரும்)

### இந்துசாதனம்

திருத்திய வருடசந்தாவிகிதம்

உள்நாடு

| | |
|---|---|
| ஆங்கிலம் | 10-00 |
| தமிழ் | 10-00 |
| ஆங்கிலம் - தமிழ் | 15-00 |
| வெளிநாடு | |
| ஆங்கிலம் | 12-00 |
| தமிழ் | 12-00 |
| ஆங்கிலம் - தமிழ் | 18-00 |


## தஞ்சைவாணன கோவை

பொய்யாமொழியார் புகன்ற "தஞ்சைவாணன் கோவை'' சொக்கப்ப நாவலர் இயற்றிய பழையவுரையை இருமொழிப்புலமையும் வாய்ந்த வித்துவான் ந. சுப்பையபிள்ளையவர்கள் பரிசோதித்து எழுதிய விளக்கக் குறிப்புகளுடன் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையார் வெளியிட்டது. விலை: ரூபா 7/-

கிடைக்குமிடம்:
சைவப்பிரகாச அச்சியந்திரசாலை
450, கே. கே. எஸ். வீதி, — யாழ்ப்பாணம்.


### நவரச நாடகாலய ஆரம்ப விழா

யாழ்ப்பாணம், பிரவுண் வீதியிலிருக்கும் நாடகாலய செயலகத்தில் நவரச நாடகாலய ஆரம்ப விழா இன்று நடைபெறும். சிறப்புச் சொற்பொழிவுகள்; இன்னிசைக் கச்சேரி, நாடகம் முதலியன இடம்பெறும்.

நல்லை. திருஞானசம்பந்தராதீன கர்த்தர் ஸ்ரீமத் தம்பிரான்சுவாமிகள் திவ்விழாவன்று திருவண்ணாமலைக்குச் செல்லுவார்கள். ந. கி.

x x x

நயினதீவு ஸ்ரீ நாகபூஷணி யம்மன் கோவில் மார்கழிமாதத் திருவெம்பாவையை முன்னிட்டு பத்து நாட்களும் பஜனை நிகழ்ச்சிகள் இடம்பெறும்.


## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.
ராமலிங்கம் செல்வராஜா —வழக்காளி
வழ. இல: M B 9048 எதிராக
கொட்டடி, யாழ்ப்பாணம்.
அம்பலவாணர் மாரிமுத்து கைம்பெண் ராசம்மா —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 9048—ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விவரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1971 ஆம் ஞூ தை மாதம் 18 ஆந் திகதி (18-1-71) திங்கட்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 8594/- இன்னும் ரூபாய் 5000/-திற்கு 4-5-67 தொடக்கம் 13-6-68 வரைக்கும் 10 வீத வட்டியும் அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 333-41 சதம்

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வண்ணுர்பண்ணைத் தென்மேற்கு வண்ணுர்பண்ணை கோவிற்பற்று "பனை விளித்தோட்டம்'' பா. நில. இலா. 8 - 4 குழி கல்வீடு கிணறு செய்பயிர் வான்பயிர்கள் இன்னுமதைச் சேர்ந்தவைகளும், இதற்கெல்லை கிழக்கு ஆறுமுகம் கைம்பெண் இரத்தினத்தினது [illegible], வடக்கு நவரத்தினம் கைம்பெண் நித்தியலெட்சுமியினுதனம், மேற்கு தயிலாயம் கைம்பெண் செல்லச்சியினுதனம், தெற்கு ரோட்டு. இதடங்கலின் பிரிவிடப்படாத ½ பங்கு

138 பருத்தித்துறை ரோட்டு,
நல்லூர், யாழ்ப்பாணம்,
8—12—70

செ. விசாகரெத்தினம்,
கொமிஷனரும்விலமதிப்பாளரும்
எம். 418 11—12—70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

புன்னுலைக்கட்டுவன் தெற்கு, கதிர்காமு சரவணை —வழக்காளி
வழ இல: M. B, 10441 எதிராக
மனைவி, பூதர் செல்லையா —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 10441ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விவரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1970-ம் ஞூ மார்கழி மாதம் 19-ந் திகதி (19-12-70) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபாய் 3825/-க்கு 8-11-68 தொடக்கம் 11-5-69 வரைக்கும் ரூபாய் 3000/-க்கு 10வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 324-17 இதில் ரூபா 150/- கோட்டுச் செலவுக்காக (22-7-1969) கொடுபட்டுள்ளது.]

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி மயிலிட்டிக் கோவிற்பற்று பலாலி இறை 'நாவலடி' யா நில. இலா. 9½ உறுதியின்படி ஆனல் தற்பொழுது அளவின்படி பா. நில. இலா. 11 வான்பயிர் செய்பயிர்களும் இணைந்தவைகளும் இதற்கெல்லை கிழக்கு சின்னப்பெடியன் கைம்பெண் வாருத்தைக்குரிய ஆதனம். வடக்கு ஒழுங்கை. மேற்கு கால் அடிப்பாதை (Adippadu) தெற்கு நாரும் [illegible] பெண் பொன்னுவுக்குரிய ஆதனம், இதில் சொரியவாக [illegible] அரைப்பங்கு.

நா. ஸ்ரீ இரங்கநாதன்,
கொமிஷனரும், விலமதிப்பாளரும்

20 பெருமாள் கோவில்
வடக்கு ஒழுங்கை, யாழ்ப்பாணம், 7-11-69. எம். 417 11-12-70


வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்


யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணுர்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில்; 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுண் வீதியில் வசிக்கும் திரு. மு. மயில்வாகனம் அவர்களால் 11—12—1970 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பத்திராதிபர் திரு. மு. மயில்வாகனம் அவர்கள்



## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு: இல M. B. 7927
S. நாராயணசாமியின் கைம்பெண் லெட்சுமி அம்மாள்
22. பெருமாள் கோவில் தெற்கு ஒழுங்கை, யாழ்ப்பாணம். —வழக்காளி
எதிராக
1. பொன்னர் வேலுப்பிள்ளை, காவெட்டித்திடல், [illegible]
2. சின்னத்தம்பி சோமசுந்தரமும் [கண்டாவளை.
3. மனைவி பொன்னம்மா, இருவரும் கல்வியங்காடு, கோப்பாய் தெற்கு —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 7927 ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விவரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1971ம் ஞூ தை மாதம் 22-ந் திகதி (22-1-71) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபாய் 6180/-க்கு 10-1-66 தொடக்கம் 10-6-69 வரைக்கும் ரூபாய் 6000/-க்கு 8 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம்கிழக்கு கோப்பாய் கோவிற்பற்று கோப்பாய் தெற்கு இறை "கொட்டு வேம்பன்" எனப்படு நிலவாசம் 5ம் கணியில் வான்பயிர்களும் செய்பயிரும் வடகரிலுள்ள கிணற்றில் பங்கும், அதற்குரிய வழியாய்க்கால் உரிமையும், எல்லை கிழக்கு சின்னத்தம்பி சோமசுந்தரத்தின் பெண் பொன்னம்மாவின் ஆதனம், வடக்கு சிவசம்பு நாதனதும் மகேஸ்வரியினதும் ஆதனம், மேற்கு ரோட்டு தெற்கு வெற்றிவேலு செல்லையாவின் உரிமையாளர்களின் ஆதனம், இது அடங்கலும். பதிவு இலக்கம் K. 224/295

சி. செ. பாலசிங்கம்
கொமிஷனரும் விலமதிப்பாளரும்
எம். 421 11-12-70
அராலி வடக்கு
வட்டுக்கோட்டை. 9-12-70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்
வழ: இல. M. B. 10086
காரைநகர். குமாரவேலு கந்தையா —வழக்காளி
எதிராக
சண்டிலிப்பாய். சண்டிலிப்பாய் வடக்கு. ஆழ்வாப்பிள்ளை மாணிக்கம் கைம்பெண் பூரணம். —எதிராளி

மேற்படி யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 10086ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி கீழ்க் காணும் ஒரு துண்டுக்காணியை 1971ம் ஞூ ஜனவரி மீ 17ந் திகதி (17-1-71) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9-30 மணி தொடக்கம் அக்காணிக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 18,825/- இன்னும் ரூபாய் 15000/-க்கு 19-6-68 தொடக்கம் 3-2-69 வரை 12வீத வட்டியும் கூடியதொகைக்கு இறுபடும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 440-59 இதில் 29-11-69ல் கொடுபட்ட ரூபா 7000/- கழிவு

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி உடுவில் கோவிற்பற்று இணுவில் இறை "வட்டுவனி" நி. பா. (3) மூன்றும், மூன்று கடைக் கட்டிடங்களும் கிணற்றில் தெற்கேயிருக்கும் கிணற்றில் பங்கும், வழியாய்க்காலும், செய்வர் வான்பயிர்களும் எல்லை கிழக்கு காங்கேசன்துறை வீதி. வடக்கு குட்டித்தம்பி பெண் செல்லமுத்துவினுதனம், மேற்கு கந்தையா பெண் ஆச்சிப்பிள்ளையினுரிமைக்காரினுதனம், தெற்கு அமெரிக்கன் மிஷனுக்குரிய ஆதனம். இடங்கலும்.

S. இரத்தினசபாபதி, J. P
கொமிசனரும், விலமதிப்பாளரும்
எம். 420 11-12-70
வைரோசன் ரோட்,
கோண்டாவில், 9-12-70.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இளவாலை. இளவாலை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், (வரையறுக்கப்பட்டது) —வழக்காளி
இல. M. B. 11007 எதிராக
வடப்புலம், சிமியோன்பிள்ளை மனுவேற்பிள்ளை
இளவாலை. கைம்பெண் அக்னேஸ்ரூணி (காலஞ்சென்ற இளவாலை சிமியோன்பிள்ளையின் ஆதனத்துக்கு சட்டப்படி பிரதிநிதி) —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 11007 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விவரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1971-ம் ஆண்டு தை மீ 13-ந் திகதி(13-1-71) புதன்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- ரூபா 1446/-க்கு 30-5-69 தொடக்கம் 13-1-70 வரைக்கும் ரூபா 1235/-க்கு 4 வீத வட்டியும் அதன்பின் வழக்குமுற்றுக இறுபடும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 474-10 சதமும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி பண்டத்தெருப்பு கோவிற்பற்று பண்டத்தெருப்பு இறை "அடம்பன" (ADAMPAN) தெற்பாலபு 11 எல்லைகிழக்கு சிமியோன்பிள்ளை அந்தோனிப்பிள்ளையின் ஆதனம், வடக்கு சமாதாதி சதாசிவத்தின் ஆதனம், மேற்கு மனுவேற்பிள்ளை அந்தோனிப்பிள்ளையின் ஆதனம், தெற்கு சாமுவேல் சட்டம்பியாரின் ஆதனம். இடங்கலும். E. 346/170 ல் பதியப்பட்டது.

செ. பாண்டித்துரை
கொமிஷனர், விலமதிப்பாளர்,
உத்தரவுபெற்ற ஏலதாரர்
Commisioner of Sales, & Auctioner & Values.
எம். 422 11-12-70
மல்லாகம்.
10-12-70